**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 799/2025**

**Prosecution witness : அ.சா.1** **Date : 22.01.2026.**

| | |
|---|---|
| **Name : மணி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சோடையூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 8 மாதத்திற்கு முன்பாக மாலை 5 மணிக்கு எதிரிகள் மூவரும் எங்கள் வீட்டிற்கு முன்பாக வந்து கடப்பாறை மற்றும் மண்வெட்டி ஆகியவற்றை எடுத்து வந்து எங்கள் வீட்டிற்கு முன்பாக வந்து காம்போன்டு சுவறை இடித்தனர். எங்கள் வீட்டை உடைத்துவிட்டு ரோடு போடுகிறோம் என்று என்னிடம் பிரச்சனை செய்தார்கள். எதற்காக சுவற்றை இடித்தீர்கள் என்று கேட்டதற்கு கெட்ட வார்த்தையால் தெவிடியா, கண்டார ஒலி என்று திட்டினார்கள்.

2) எனக்கு இடம் இல்லை என்று சொல்லி என்னை வெளியே செல்ல சொன்னார்கள். சந்திரா, நடராஜ், ராஜுவ்காந்தி ஆகியோர் என்னை கீழே தள்ளிவிட்டு முதுகில் கையால் அடித்தார்கள். மறுநாளும் வந்து பிரச்சனை செய்தார்கள். இது சம்மந்தமாக நான் ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சென்றேன். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) எதிரிகள் என் உறவினர்கள். எனக்கு ஓமலூர் நீதிமன்றத்தில் நிலப்பிரச்சனை வழக்கு உள்ளதா என்றால் ஆமாம். என் வீட்டிற்கு அடுத்தாற்போல் என் பங்காளிகள் வீடு உள்ளதா என்றால் ஆமாம். எதிரிகள் அந்த வீட்டு வழிக்கு செல்ல என் வீட்டின் வாசல் வழியாக தான் செல்ல வேண்டுமென்று சொன்னால் சரிதான்.

4) சம்பவம் நடப்பதற்கு சிறிது நாட்களுக்கு முன்னர் எதிரிகள் பாதையில் செல்வதை நான் தடுத்தேனா என்றால் இல்லை. 10 நாட்களுக்கு முன்னர் எங்களுக்குள் தகராறு வரவில்லை என்றால் சரிதான். ரோடு போடுவதாக எந்த தேதியில் கேட்டார்கள் என்றால் நினைவில்லை. என் வாசல் முன்பு ஒரு அடி உயரத்திற்கு காம்போன்டு சுவற்றை கட்டியுள்ளேனா என்றால் ஆமாம். அந்த ஒரு அடி சுவற்றை சம்பவத்தன்று எதிரிகள் இடிக்க வந்தார்கள் என்றால் சரிதான்.

5) எதிரிகள் அடித்ததில் முதுகில் ரத்த காயம் ஏற்பட்டதா என்றால் ரத்த காயங்கள் ஏற்படவில்லை. கன்றிய காயம் ஏற்பட்டது. என் உறவினர் ஆனந்த் என்பவர் எதிரிகள் மீது புகார் கொடுத்ததில் CC No.742/2025 என்ற வழக்கில் நான் சாட்சி என்றால் ஆமாம். இந்த வழக்கில் ஆனந்த் சாட்சி என்றால் சரிதான். CC No.742/2025 என்ற வழக்கில் ஆனந்த் சாட்சியாக உள்ள நன்றிக்காக இந்த வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) நான் காயம்பட்டவுடன் மருத்துவமனைக்கு சென்றேன். நான் எப்போது மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் நினைவில் இல்லை. மருத்துவமனையில் ஒரு தாளில் போலீசார் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். ஆக ஏற்கனவே எதிரிகளுக்கும் எனக்கும் நிலப்பிரச்சனை இருந்தது என்றும் அவர்கள் செல்லும் என் வாசலுக்கு முன்னால் இருந்த பாதையை அவர்கள் பயன்படுத்தி வந்ததை நான்

ஆட்சேபனை செய்ததால் இந்த வழக்கில் ஆனந்த்க்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**